## ONDC நெட்வொர்க் லைவ் ஆக 3 லட்சம்+ விற்பனையாளர்கள் / சர்வீஸ் புரொவைடர்கள் 1 கோடி+ எஸ்கேயூக்கள் 500 நகரங்களில் இருந்து

**ONDC நெட்வொர்க்**, எல்லா புராடக்ட் ரகங்கள் மற்றும் நகரங்கள் முழுவதும் முழு வேகத்தில் விஸ்தரித்துக் கொண்டிருக்கிறது.



**#வோக்கல் ஃபார் லோக்கல் | #தன்னிறைவு பாரதம்**

### செல்லர் நெட்வொர்க் பங்கேற்பாளர்கள்

உங்களை ONDC நெட்வொர்க்கில் ரெஜிஸ்டர் செய்ய வைத்து இதில் நீங்கள் சேர்வதற்கு உதவுவார்கள். இதில் நீங்கள் உங்கள் புராடக்டுகளை ஆன்லைனில் விற்பனை செய்யலாம்.

### செல்லர் நெட்வொர்க் பங்கேற்பாளர்கள்

பையர் நெட்வொர்க் பார்டிஸிபென்ட்ஸ் - ONDC-யின் ஆற்றலூட்டப்பட்ட பல்வேறு பையர் அப்ளிகேஷன்களிலிருந்து வாங்க விரும்புவோரை உங்களிடம் கொண்டு வருவார்கள், அவர்கள் நீங்கள் விற்க விரும்பும் புராடக்டுகளை நெட்வொர்க்கில் அக்ஸெஸ் செய்வார்கள்.

### லாஜிஸ்டிக்ஸ் சர்வீஸ் வழங்குவோர்

ஏராளமான லாஜிஸ்டிக்ஸ் சர்வீஸ் வழங்குவோரிடம் உங்களுக்கே உரிய டெலிவரி நிபந்தனைகளுக்கேற்ப, உங்கள் புராடக்டுகள் வாடிக்கையாளர்களுக்கு டெலிவரி செய்வதற்கு நீங்கள் தேர்வு செய்து கொள்ள முடியும்.

ஸ்கேன் செய்து நெட்வொர்க் பங்கேற்பாளர்களுடன் இணைத்திடுங்கள்

*ONDC நெட்வொர்க்கில் எப்படி விற்பனை செய்வது என்பதை அறிய ஸ்கேன் செய்யுங்கள் அல்லது +91 81309 35050 என்ற எண்ணில் ''Hi'' சொல்லுங்கள் மற்றும் ஓஎன்டிசி சகாயக் உடன் சாட் செய்யுங்கள்*

Open Network for Digital Commerce

டிஜிட்டல் காமர்ஸிற்காக ஓப்பன் நெட்வொர்க் © 2023
DPIIT-யின் ஓர் முயற்சி

மேலும் அதிக விவரங்களறிய எங்களை தொடர்பு கொள்ளுங்கள்:
team@ondc.org

@ondc_official @ondc ltd.
@open network for digital commerce (ondc) @ondc_official

ONDC நெட்வொர்க் வாயிலாக இந்தியா முழுவதும் விற்பனை செய்து கொண்டிருக்கும் மற்ற செல்லர்களை தெரிந்து கொள்ள காணவும் www.ondc.org/sellers

''இது தகவல் நோக்கங்களுக்காக மட்டுமே. இதன் முழுமை தன்மை அல்லது துல்லியம் தன்மை பற்றிய எந்த வாக்குறுதிக்கும் ONDC எந்த பொறுப்பும் ஏற்காது.''

Open Network for Digital Commerce




# ஆன்லைன் பிஸ்னஸ் எளிதாக்கப்பட்டு விட்டது மற்றும் ஒளிவுமறைவானதாகி விட்டது

**இந்திய அரசாங்கத்தின் பின்பலத்தைக் கொண்டிருக்கும் ONDC, உங்கள் புராடக்டுகளை இந்தியா முழுவதும் விற்பனை செய்து உங்கள் பிஸ்னஸ்ஸை பன்மடங்காக விருத்தி செய்து கொள்வதற்கான அதிகாரத்தை அளிக்கிறது**

இன்று ஆன்லைனில் பிஸ்னஸ்ஸை நிறுவுவதில் பல்வேறு வகையான e-பிளாட்ஃபார்ம்களில் ஓர் அங்கமாக இருப்பதை உள்ளடக்கியுள்ளது. அதில் அவர்கள் நிர்ணயிக்கும் நிபந்தனைகள் மற்றும் ஷரத்துகளை பின்பற்ற வேண்டிய நிர்பந்தத்திற்கு நீங்கள் உள்ளாகிறீர்கள். அதனால் உங்கள் பிஸ்னஸ் அப்படியும் உங்களுக்கே முழு சொந்தமானதாக இல்லை. காரணம், ஒரு தனி நிறுவனமே ஆரம்பம் முதல் இறுதி வரை உங்களை கட்டுப்படுத்தி விடுகிறது.



## தற்போது நீங்கள் எதிர்கொள்ளக் கூடிய சவால்கள்

| நான் ஓர் ஆன்லைன் வர்த்தகர் | நான் ஓர் ஆஃப்லைன் வர்த்தகர் |
|---|---|
| பேமெண்டுகளை பெறுவதில் தாமதம் | குறைந்த இடங்களையே எட்ட முடிகிறது |
| அதிக அளவில் கமிஷன் | புராடக்டை ஸ்டோர் செய்து பராமரித்திட செலவு அதிகரிக்கிறது |
| வாடிக்கையாளரின் புள்ளி விவரங்களை பெற முடிவதில்லை | அடிக்கடி விற்பனை செய்வதை தவற விட வேண்டியுள்ளது |
| மிகப்பெரிய அளவிலான அமைப்புகள் அவை அவற்றுக்கே உரிய நிபந்தனைகள்மற்றும் ஷரத்துகளை விதிக்கின்றன | மென்மேலும் அதிக வாடிக்கையாளர்களை எட்ட முடியாத இயலாமை |

**இதுபோன்ற பிரச்சனைகளை நீங்கள் எதிர்கொள்கிறீர்கள் என்றால்,** ONDC, லாபத்தை குறிக்கோளாக கொண்டிராத மற்றும் அரசாங்கத்தின் பின்பலத்தை கொண்ட முயற்சியான இது உங்கள் கைகளிலேயே அதிகாரத்தை அளிப்பதின் மூலம் நீங்கள் உங்கள் பிஸ்னஸ்ஸை மிகவும் சிறப்பாக நடத்த உதவி செய்கிறது.

## அப்படியென்றால், இந்த ஞசஈஇ என்பது என்ன ?

ஒப்பன் நெட்வொர்க் ஃபார் டிஜிட்டல் காமர்ஸ் (ONDC), ஓர் ஆப் அல்ல. இது இந்தியாவில் e-காமர்ஸில் புரட்சியை ஏற்படுத்துவதற்காக இந்திய அரசாங்கத்தின் ஆதரவு பெற்ற ஓர் ஒப்பன் நெட்வொர்க் ஆகும்.

- நாங்கள் எல்லா வர்த்தகர்களுக்கும் சரிநிகர் வசதி வாய்ப்புகளை அளிக்கிறோம் என்பதால், மிகப் பெரும் நிறுவனங்களை நீங்கள் சார்ந்திருக்க வேண்டியதில்லை
- இந்தியா முழுவதிலுள்ள வாடிக்கையாளர்களோடு உங்களை நாங்கள் இணைக்கிறோம்
- அதிக பிஸ்னஸ் நடப்பதையும், பெருமளவில் வாடிக்கையாளர்களின் பேஸ் மற்றும் உயர் வருமானம் கிடைப்பதை நாங்கள் நிச்சயப்படுத்துகிறோம்
- இவையனைத்துமே, ஒரு எளிய, 100% ஃப்ரீ ஆன்போர்டிங் பிராஸஸில் நடைபெறுகின்றன



## ONDC உங்களுக்கு எவ்வாறு பயனளிக்க முடியும் ?

| நான் ஓர் **ஆன்லைன்** வர்த்தகர் | நான் ஓர் **ஆஃப்லைன்** வர்த்தகர் |
|---|---|
| யாராவது ஒரு செல்லர் நெட்வொர்க் பங்கேற்பாளரை தேர்வு செய்து கொண்டு உங்கள் நிபந்தனைகளின்படி பிஸ்னஸ்ஸை நடத்துங்கள் | நாடெங்கும் உங்கள் புராடக்டுகளை வாங்குவோருக்கு உங்கள் பிஸ்னஸ் தெளிவாக தென்படும் |
| உரிய நேரத்தில் பேமெண்டுகளை பெறுங்கள் | ஒரே முறை மட்டுமே ரெஜிஸ்டர் செய்து பல்வேறு பையர் அப்ளிகேஷன்களெங்கும் உங்கள் புராடக்டுகளை வெளிப்படுத்திக் காட்டுங்கள் |
| ஆஃப்லைனில் தெரிந்து வைத்திருப்பது போல அதே வழியில் உங்கள் வாடிக்கையாளர்களை தெரிந்து கொள்ளுங்கள் | உங்கள் பிஸ்னஸ்ஸிற்கும், ரேட்டிங்கிற்கும் எதுவும் பாதிப்பு இல்லாமலேயே செல்லர் அப்ளிகேஷன்ஸிற்கு மாறிக் கொள்வதற்கான சௌகரியம் |
| வாடிக்கையாளர்கள் இப்போது வெறும் பெரிய கம்பெனிகளை அல்ல, அவர்கள் எல்லாரிடமும் வருவது தெரியும் | பிஸ்னஸ்ஸை நடத்த குறைந்த செலவே ஆகும் |

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

### ONDC நெட்வொர்க் வாயிலாக நான் எவ்வாறு விற்பனை செய்ய முடியும்?

இது மிகவும் எளிய 4 ஸ்டெப் பிராஸஸ் ஆகும்.

**ஸ்டெப் 1**
உங்களை நீங்களே ரெஜிஸ்டர் செய்து கொண்டு ONDC நெறிமுறைகளைக்கு இணக்கமான ஓர் செல்லர் அப்ளிகேஷனில் ஆன்போர்டிங் ஆகுங்கள்.

**ஸ்டெப் 2**
ரெஜிஸ்ட்ரேஷனை பூர்த்தி செய்வதற்கு உங்கள் KYC டாக்குமெண்டுகளை கொடுங்கள்.

**தேவைப்படக் கூடிய டாக்குமெண்டுகள் இவையே:**

1. PAN கார்டு
2. ஆதார் கார்டு (டில்லிக்கு மட்டும்)
3. GST ஸர்டிஃபிகேட்
4. அக்கவுன்ட் விவரங்களுக்காக கேன்ஸல்டு செக்
5. FSSAI (F&B பேக்கேஜ்டு ஐட்டங்களுக்கு இது கட்டாயம் தேவை)

**ஸ்டெப் 3**
ரெஜிஸ்ட்ரேஷனுக்குப் பிறகு, செல்லர் நெட்வொர்க் பங்கேற்பாளர், உங்கள் அனைத்து புராடக்டுகளின் ஓர் டிஜிட்டல் கேட்டலாகை உருவாக்குவார். நீங்கள் ஒரு செல்லர் அப்ளிகேஷனையும் அக்ஸெஸ் செய்ய முடியும். அதில் ஆன்லைன் ஆர்டர்கள், பேமெண்ட்ஸ் ஆகியவற்றை எளிதாக நிர்வகித்து சரிபார்க்கலாம் அதோடு உங்கள் இன்வென்ட்ரியை அப்டேட் செய்து கொள்ளலாம்.

### ONDC-யில் எங்கே நான் ஆர்டர்களை பெற்றுக் கொள்ள முடியும் ?

ஆர்டர் நோட்டிஃபிகேஷனை நீங்கள் உங்கள் செல்லர் அப்ளிகேஷனின் டாஷ்போர்டில் பெற்றுக் கொள்வீர்கள். ஸ்டாக் கிடைக்கும் தன்மை மற்றும் மற்றவர்களுக்கு தர வேண்டிய புராடக்டுகளை கருத்தில் கொண்டு ஆர்டரை ஏற்றுக் கொள்ளவோ அல்லது நிராகரிக்கவோ உங்களால் முடியும். நீங்கள் லைவ் ஆர்டர்களை கண்காணிப்பதோடு உங்கள் ஆர்டர்களின் டெலிவரி நிலவரத்தையும் தெரிந்து கொள்ள முடியும்.

### செல்லர் அப்ளிகேஷனை உபயோகிப்பது குறித்து எனக்கு யார் பயிற்சி அளிப்பார்கள் ?

செல்லர் நெட்வொர்க் பார்டிஸிபென்ட் டீம் உங்களுக்கு பயிற்சியளித்து, உங்கள் பிஸ்னஸ்ஸை எவ்வாறு நிர்வகித்து அதை மேலும் வளர்ப்பது என்பதை நீங்கள் கற்றுக் கொள்ளவும் உதவி செய்வார்கள்.

### எனது பணம் எனக்கு எப்படி கிடைக்கும்?

பேமெண்ட் செல்லர் நெட்வொர்க் பங்கேற்பாளர்களுடன் கொண்டிருக்கும் கமர்ஷியல் நிபந்தனைகளின்படி பொதுவாக ஆர்டர் பூர்த்தியான பிறகு 3-7 நாட்களுக்குள் உங்கள் பேங்க் அக்கவுன்டிற்கு அனுப்பி வைக்கப்படும்.